# தேசிய கல்வி நிறுவகம்

## பட்டப்பின் கல்வி முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி

## (முழு நேரம்-2018, பகுதி நேரம் - 2018/2019)

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தி முகாமைத்துவ பீடத்தினால் நடாத்தப்படும் மேற்படி பாடநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பாடநெறி நடைபெறும் இடம்** : கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தி முகாமைத்துவ பீடம் , தேசிய கல்வி நிறுவகம், மீப்பே சந்தி, பாதுக்கை.

**பாட நெறியின் காலம்:-** முழு நேரம் - ஒரு வருடம்

பகுதி நேரம் - இரண்டு வருடம் (மாதத்தில் இரண்டு கிழமைகள்)

**ஊடக மொழி :** முழு நேர பயிற்சி நெறி ஆங்கில மொழியில் நடைபெறும்.

பகுதி நேர பயிற்சி நெறி சிங்களம், தமிழ் மொழிகளில் நடைபெறும்.

(ஆயினும் சிங்களம், தமிழ், அல்லது ஆங்கிலம் ஆகிய மொழிகளுள் ஏதாவது ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்றலாம். விரிவுரை தொடர்பான கலந்துரையாடல்கள் மேற்குறித்த மொழிகளில் நடைபெறும்)

**விண்ணப்பிப்பதற்கான தகைமைகள்**

I. இலங்கை கல்வி நிர்வாக சேவை / இலங்கை அதிபர் சேவை / இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையைச் சேர்ந்தவராயிருத்தல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அரச நிறுவனமொன்றின் / பிரிவெனாவொன்றின் / அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனமொன்றின் தலைவராகவிருத்தல்.

II. (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் /அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட கல்விமாணிப் பட்டம்.

அல்லது

(ஆ) வேறு பட்டங்களுடன் பட்டப்பின் கல்வி டிப்ளோமா / ஆசிரியர் பயிற்சி சான்றிதழ் / கல்வியியல் கல்லூரி டிப்ளோமா போன்ற தொழிற்றகைமைகளில் ஒன்று இருத்தல்.

III. நான்கு வருட கற்பித்தல் அனுபவமும் அதில் இரண்டு வருடங்களேனும் நிர்வாக மற்றும் மேற்பார்வை பணிகளில் ஈடுபட்டிருத்தல்.

IV. இப்பாடநெறியில் கலந்துகொள்ளும் காலப்பகுதியில் தேசிய கல்வி நிறுவகத்தில் வேறு எந்த ஒரு பாட நெறியிலோ அல்லது வேறும் உயர்கல்வி நிறுவகங்களிலோ நடாத்தப்படும் எந்த ஒரு பாடநெறியிலோ முழுநேர / பகுதி நேர பங்குபற்றுனராக இல்லாதிருத்தல்.

**பாடநெறிக்கு தெரிவு செய்யும் முறை:**

1) கல்வி முகாமைத்துவம்
2) ஆங்கில மொழி மற்றும் கற்பித்தல் திறன்களுடன் தொடர்பான விடயங்கள்

ஆகிய இரு வினாப்பத்திரங்களைக் கொண்ட நுழைவுப் பரீட்சைக்குத் தோற்றி அப்பரீட்சையில் உயர் புள்ளிகளைப் பெறுபவர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு பெறுபேறுகளின் அடிப்படையில் மட்டும் தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

**விண்ணப்பிக்கும் முறை**

கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தினை போன்றதோர் படிவம் ஒன்றை தயாரித்து, நீங்கள் பணியாற்றும் நிறுவனத்தலைவரின் விதந்துரையுடன் தேசிய கல்வி நிறுவக பணிப்பாளர் நாயகத்தின் பெயரில், இலங்கையின் எந்த ஒரு பிரதான இலங்கை வங்கிக் கிளையிலும் கணக்கு இலக்கம் 7041168 ல் நுழைவுப் பரீட்சைக் கட்டணம் ரூ 1000.00 வைப்பிலிட்டு அதன் பற்றுச்சீட்டையும் இணைத்து பிரதிப் பணிப்பாளர் நாயகம், கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தி முகாமைத்துவ பீடம், மீப்பே சந்தி, பாதுக்கை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். உங்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் பட்சத்தில் விண்ணப்பக் கட்டணம், நுழைவுப் பரீட்சைக் கட்டணம் மீளச்செலுத்தப்பட மாட்டாது.

**பாடநெறிக்கான கட்டணம் ரூபா** 60000/-.

விண்ணப்பப்பத்திரத்தை அனுப்பி வைக்கும் கடித உறையின் மேல் இடது மூலையில் முழு நேரமாயின் PGDEM-2018 (முழு நேரம்) பகுதி நேரமாயின் PGDEM-2018/2019 (பகுதி நேரம்) எனக் குறிப்பிடவும்.

**விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி :-** முழுநேரம் 15.09.2017

கலாநிதி. திருமதி. T.A. R. J. குணசேகர
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.